# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1984 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1984, சனவரி மாதம் 13 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1984, சனவரி மாதம் 13 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 20* *தபாற் செலவு : சதம் 60*

# 1984 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் (திருத்தச்) சட்டம்

[1984, சனவரி மாதம் 13 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ 63/81

## 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது, 1984 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும் 1979 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஊழியர் பேரவைகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவானது இடப்படுகிறது :—

"தேர்தல் சபையை ஆணையாளர் நியமித்தல்.

8. பதினைந்தாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய பேரவையின் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் இரண்டு மாதங்களுக்குக் குறையாது தேர்தல் சபையொன்றை ஆணையாளர் நியமித்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய தேர்தல் சபை தகவுள்ள ஐந்து ஊழியர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அவர்களுள் ஒருவர் அத்தகைய தேர்தல் சபையின் தவிசாளராக நியமிக்கப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச்சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுவார காலத்திற்குள் அத்தகைய சபை" என்ற சொற்களுக்குப் பதிலாக "நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் அத்தகைய சபை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச்சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தேர்தலொன்றைத் தள்ளிவைக்குமிடத்து, ஒரு புதிய பேரவையின் தேர்தலை நடாத்தும் நோக்கத்துக்காக, ஒரு தேர்தல் சபையை அந்தக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சியில் அவர் தாமதமின்றி நியமித்தல் வேண்டும்.".

ஏ 073975—3,125 (12/83)

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*